ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1828/24 - 2013 සැප්තැම්බර් මස 18 වැනි බදාදා - 2013.09.18

*1828/24 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமத்திய மாகாண மாகாண சபை**

வடமத்திய மாகாண பாதைப் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் அதிகார சபையின் நியதிச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படுகின்ற கட்டளைகளும் சட்டங்களும்

*வடமத்திய மாகாண மாகாண சபையின் 1994 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க பாதைப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினை ஸ்தாபிப்பதன் சட்டத்தின் கீழ் வடமத்திய மாகாணசபை மூலம் 2000 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 8 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2000, மாச்சு 3 ஆம் திகதிய 1121/21 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் கீழ் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள், வடமத்திய மாகாண மாகாண சபையின் 1994 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க பாதைப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினை ஸ்தாபிப்பதன் சட்டத்தின் 4 ஆம் பிரிவில் பொதுச் சட்டதிட்டங்கள் 30.1 இன் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் கீழ்வரும் விதத்தில் திருத்தியமைக்கப்படுகின்றது என அனைவரும் விளங்கிக்கொள்வதற்காக இச்சட்டத்தினை வெளியிடுகிறேன்.*

எச். பி. சேமசிங்க,<br>
சுகாதார, தேசிய வைத்திய, சமூக நலன்புரி,<br>
பராமரிப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பு, மகளிர்<br>
விவகார, போக்குவரத்து மற்றும் வீடமைப்பு அமைச்சர்,<br>
வடமத்திய மாகாண மாகாண சபை.

**உத்தரவுகள்**

1. இந்த உத்தரவு திருத்தியமைக்கப்பட்ட உத்தரவு என குறிப்பிடப்படுவதோடு அரச வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற நியதிகளுக்கமைய வடமத்திய மாகாண போக்குவரத்து விவகார அமைச்சர் மூலம் குறிப்பிடப்படுகின்ற திகதியிலிருந்து அது செயற்படுத்தப்பட வேண்டும். பெயர் மற்றும் செயற்படுத்தப்படும் திகதி.

2. பிரதான உத்தரவு ஏட்டின் 2 ஆம் இலக்கத்தின் கீழுள்ள 3 ஆம் உப பிரிவின் கீழ் பொது நேரசூசிகள் தயாரிக்கப்படுதலானது உப பிரிவில் சேர்த்துக்கொள்ளப்படும். நேரசூசி தயாரிப்பு.

*பிரிவு* **III**

(அ) பிரயாணஞ் செய்பவர்கள் பஸ்வண்டி போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள் பயணிகளின் தேவைப்பாட்டிற்கப்பால் பிற காரணங்களை கருத்திற் கொண்டு பாதை போக்குவரத்து சேவை அதிகார சபை மூலம் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு ஒன்றிணைக்கப்பட்ட பொது நேரசூசி முறைப்படியேயாகும். ஏதேனும் வீதியில் அல்லது பகுதியில் பிரயாணிகளின் அவசியப்பாட்டை செயற்படுத்துவதற்காக முழு நாளும் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ் வண்டிகளின் போக்குவரத்து தவணைகள் பொது திட்டமிடலுக்கமைய செயற்படுத்தப்பட்டு ஒன்றிணைக்கப்பட்ட பொது நேரசூசி மூலம் பூர்த்தியாக்கப்படும். இதனால் அந்தந்த வீதிகளில் பிரயாணிகளின் அவசியப்பாடு, தேவைப்பாடு திருப்திகரமாக நடைபெற வேண்டுமென்பதோடு, ஆபத்தான போட்டிகளை தடுப்பதற்கும் திறனான

ஓடுதல்களுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் இடம் கொடுக்கும் விதத்தில் போக்குவரத்தாளர்கள் ஒன்றிணைக்கப்பட்ட பொது நேரசூசியில் போக்குவரத்து தவணைகள் முறையாக திருத்திக் கொடுப்பதோடு அதிகார சபை மூலம் செய்யப்பட வேண்டும். ஒன்றிணைக்கப்பட்ட பொது நேரசூசி தயாரிக்கப்படுதல் இலங்கை போக்குவரத்துச் சபையோடு சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்து முறையாக தயாரிக்கப்படுதல் வேண்டும்.

ஆ. பொது நேரசூசியை பிரயாணிகளின் வேண்டுதலுக்கு இணங்க மாற்றுதல் காலத்தின் சேவையின் அவசியத்தைப் பொருத்து நிர்வாக வசதி, சேவையின் திறமை நகரங்களுக்கிடையிலான பொது தொடர்பு சேவையை ஏற்படுத்தல் பிரயாணிகளின் பாதுகாப்பு மற்றும் வசதிகளை மேம்படுத்தல் போன்ற காரணங்களை முன்வைத்து திருத்துவதற்கு பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரி செயற்படல் வேண்டும்.

இ. பொது நேரசூசியின் பிரகாரமின்றி பிரயாணிகளின் போக்குவரத்திற்காக பஸ்வண்டிகளை ஈடுபடுத்தும்படி வேண்டிக்கொள்ளுமிடத்து சிறப்புடைய திறமையுடைய சேவையொன்றிற்கு இவ்வேண்டுதல் முக்கியமானதெனின் வடமத்திய மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரியால் அதற்கு விசேட அனுமதி வழங்கப்படும். அவ்வாறான நேரங்களில் பிரயாணிகளின் போக்குவரத்து பஸ்வண்டிகள் ஈடுபடுத்தலுக்கான திட்டம் போக்குவரத்து அதிகாரியினால் அனுமதிக்கப்படல் வேண்டும். அவ்வாறான அனுமதியின்றி பொது நேரசூசியின் பிரகாரமின்றி எவருக்காவது/எந்தக் கம்பனிக்காவது/எந்த நிறுவனத்துக்காவது/எந்த சபைக்காவது பிரயாணிகளின் போக்குவரத்திற்காக பஸ்வண்டிகளை ஈடுபடுத்தல் கூடாது.

ஈ. பாடசாலைப் பிள்ளைகளுக்கு மாத்திரம் ஈடுபடுத்தப்படும் பாடசாலை பிரயாண முறைகள், அலுவலக சேவைகள், இரவுநேர மற்றும் அதிகாலை நேர பிரயாணிகளின் விசேட சேவைகள் அஞ்சல் சேவையும் அது போன்ற விசேட சேவைகள் என்பன தேவைகளுக்கேற்ப பொது நேரசூசியின் பிரகாரமின்றி நடாத்த அதிகாரிக்கு முடியும்.

உ. பொது நேரசூசி ஆக்கும் போது பாதைகளைத் தெரிவு செய்தல், பிரயாண முடிவைத் தீர்மானித்தல், பாதைக்கான இலக்கத்தைக் கொடுத்தல், பிரயாணிகளிடமிருந்து அறவிடும் கட்டணங்களை நிர்ணயித்தல், ஓட்டுதல், பரிசீலனை செய்தல், காலத்தை நிர்ணயித்தல், பிரயாணிகளைப் பரிசீலனை செய்தல், பிரயாணிகளின் வேண்டுகோள்களுக்கு மதிப்பளித்தல், சேவைகளை மீண்டும் திட்டமிடல், திருத்தங்கள் செய்தல் என்பன பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரியால் தேவைக்கேற்ப செயற்படுத்தப்படல் வேண்டும். உரிய விடயங்களைச் செய்யும் போதுள்ள விதிமுறைகள் பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரியால் சட்டங்களாக ஆக்கப்படுகின்றன.

ஊ. புதுசேவைகளை ஆரம்பிக்கும்போது அதற்காக அரச பஸ்வண்டி சேவையொன்றை அளிக்க வேண்டுமா அல்லது தனியார் பஸ்வண்டி சேவையொன்றை அளிக்க வேண்டுமா என முன்வைக்கப்படும் வேண்டுதல்களின் தன்மைக்கேற்பவும், ஓட்ட இயலுமான தன்மைக்கேற்பவும் அதிகாரியால் முடிவெடுக்கப்படல் வேண்டும். புதிய பாதைகள் பற்றிய பரிசீலனைக்கும் தகவல்களுக்கும் ஏற்ப போக்குவரத்து சம்பந்தமான பிரேரணைகள் முன்வைக்க வேண்டியதுடன் அப்பிரேரணைகளை கவனத்தில் கொண்டு சேவையை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

எ. வேறொரு மாகாண சபைப் போக்குவரத்து அதிகாரியொன்றோ, அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் அதிகாரியொன்றோ, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவொன்றோ, இந்த மாகாண சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் பஸ்வண்டியொன்றை ஓட்டுவதற்காக அனுமதிப்பத்திரமொன்றை விநியோகிக்க எண்ணுமிடத்து அதற்காக வடமத்திய மாகாண பாதைப் பயணிகள் போக்குவரத்து அதிகாரியின் இணக்கத்தை எழுத்து மூலம் பெறல் வேண்டும். இவ்வாறான சேவைகள் பொது நேரசூசி முறைக்குப் பாதகமில்லாவண்ணம் இருக்க வேண்டியதுடன், அநாவசிய போட்டிகள் ஏற்படாதவாறு செயற்படுவது அனுமதிப்பத்திர அதிகாரியினதும் ஓட்டுபவரினதும் பொறுப்பாகும். நடைமுறையிலுள்ள பொது நேரசூசியின் படியான சேவையுடன் அனாவசியமான போட்டிகள் ஏற்படுவதோ, ஏற்படுவதற்கோ ஏனைய சேவைகளுடன் சண்டை சச்சரவுகள் ஏற்படவோ அல்லது ஏற்படுத்தவோ இடமளிப்பது மற்றும் ஓட்டுதல் நேரசூசியின் முறைக்கேற்ற வருமானங்களுக்கு இடைஞ்சல் ஏற்படும் விதமான மாகாணங்களுக்கிடையிலான சேவைகளை தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ இடைநிறுத்துவதற்கு ஏற்ற விதத்தில் கருமமாற்றல் வேண்டும்.

ஏ. தற்போதுள்ள பொது நேரசூசிகளில் சேவைகளோடு ஆபத்தான போட்டிகள் ஏற்படுதல் மற்றும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் வேறு சேவைகளுடன் சண்டை சச்சரவுச் சூழ்நிலை உருவாகுதல் மற்றும் உருவாகும் சந்தர்ப்பத்தை உண்டாக்குதல், வேறு போக்குவரத்து நேரசூசிகளின் வருமானங்களுக்கு நட்டத்தை உண்டாக்குதல் போன்றவைகள் மூலம் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக போக்குவரத்தினை தடைசெய்ய முடியும்.

ஐ. பிற போக்குவரத்து அதிகார சபையின் அல்லது தேசிய போக்குவரத்து கொமிஷன் சபையின் மூலம் அல்லது கிடைத்துள்ள பிரயாணிகள் போக்குவரத்திற்கான அனுமதியினை பரிசீலனை செய்வதற்கு மற்றும் பிரதான விடயங்களுக்கான அதிகாரங்களுக்கேற்ப நடவடிக்கை எடுப்பதற்கு பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபைக்கு அதிகாரமுள்ளது.

ஒ. நேரசூசி அமுலாக்கப்படும் போது பிரயாணிகளின் தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதுடன் தேவைகள் ஏற்படும் போது ஓட்டும் சாரதிகளுடன் கலந்தாலோசித்து நேரசூசியை அமுல்படுத்த வேண்டும். நேரசூசியில் பிரச்சினைகளிருப்பின் அதுபற்றி ஓட்டுநர்கள் அதிகாரிக்கு அறிவிக்க வேண்டியதுடன் இரு வாரங்கள் ஓட்டிய பின்னர் அதுபற்றி மீண்டும் கலந்துரையாடி பெற்ற திருத்தங்களுடன் அமுல் செய்ய அதிகாரி கருமமாற்ற வேண்டும்.

ஓ. அவ்வவ் பாதைகளில் பொது நேரசூசியின் பிரகாரம் தினத்திற்கு ஒழுங்குபடுத்தியுள்ள அனைத்து பிரயாண முறைகளையும் உரிய நேரசூசியின் பிரகாரம் ஓட்டச் செய்தல் அதிகாரியின் நிலைய நிர்வாகத்தினரின் முக்கிய கடமை என்பதுடன், ஏதாவது காரணங்களுக்காக பஸ்வண்டி ஓடுதலில் ஈடுபடாதவிடத்து ஓடும் ஒழுங்கில் குறைவாகும். பிரயாண முறைக்கு காத்திருக்கும் பட்டியலில் உள்ள பஸ்வண்டியை ஓடச் செய்வதற்கு அதிகாரி செயல்படல் வேண்டும்.

ஔ. பொது நேரசூசியில் அனுமதிக்கப்பட்ட அனைத்து பிரயாண முறைகளிலும் ஒழுங்காக ஓட்டுவதற்கு ஏற்புடைய பின்பற்ற வேண்டிய கரும முறைகள் அதிகாரியால் நிலைமைக்கேற்ப சட்டமாக ஆக்கப்படும். குறைவாக பிரயாண முறை ஒழுங்கு முறைக்கு இடமளிக்கும்போது உரிய பாதையில் அனைத்து ஓட்டுநர்களுக்குப் பிரிந்து போகும் விதத்திலோ அல்லது தொடர்ந்து ஓட்டுவதற்கு நிரந்தர ஓட்டுநர் ஒருவரை நியமித்தலோ செய்தல் வேண்டும்.

க. பாடசாலைப் பிள்ளைகளின் பிரயாணம், விசேட உற்சவங்கள், கூட்டங்கள் அல்லது மக்கள் திரளும் சந்தர்ப்பங்கள் போன்ற காரணங்களை முன்னிட்டு பொதுவான நேரசூசிக்கு மேலதிகமாக பிரயாண முறைகளை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஏற்படுத்துவதற்கு அதிகாரிக்கு முடியும்.

3. பிரதான சட்டக்கோவை இலக்கம் 2 இன் கீழ் குறிப்பிடப்பட்ட (iv) பிரிவின் உபபிரிவின் கீழ் பஸ்தரிப்பிட அமைப்பு மற்றும் நிர்வாக ரீதியாக உபபிரிவொன்று சேர்க்கப்படும். பஸ் தரிப்பிட முகாமை மற்றும் ஒழுங்கமைப்பு.

*பிரிவு* **IV**

(அ) வடமத்திய மாகாண அதிகாரப் பிரிவுக்குள் பொது நேரசூசி ஒழுங்கு முறைக்கமைய ஓடும் அனைத்து பஸ் வண்டிகளும் திறமையுடைய நியாயமான முறையில் நிர்வகிக்கப்பட்டு உரிய முறையிலான பிரயாணிகள் போக்குவரத்து சேவை ஒன்றை பிரயாணிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு அனைத்து பஸ் நிலையங்களின் பஸ்வண்டிகள் சேவை முகாமைத்துவம் பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரியால் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ) போக்குவரத்து அதிகாரியின் முன் அனுமதியின்றி வேறு தனியார்களுக்கோ, நிறுவனங்களுக்கோ பஸ்நிலையத்திற்குள் பஸ்வண்டிகளை உள்ளாக்கவோ, வெளியாக்கவோ, ஏடுகளைப் பதியவோ பிரயாணிகளைச் சேர்க்கவோ, ஆசனங்களை ஒதுக்கவோ போன்ற பஸ்வண்டிகள் சேவைகள் முகாமைத்துவத்திற்குரிய எச்செயல்களையும் செய்யக்கூடாது.

(இ) பிரயாணிகளுக்கு போதியளவிலானதும் நற்பண்புடையதுமான சேவையொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்றதாகவும் அனைத்து ஓட்டுநர்களுக்கும் அதற்காக இடவசதிகள் செய்து கொடுப்பதற்கு ஏற்றவிதத்தில் உரிய சேவைகள் நிர்வாகத்தை இலேசாக்குவதற்கு வடமத்திய மாகாண சபை அனைத்து பஸ்நிலையங்களிலும் சுதந்திரமாக பரிமாறுவதற்காக பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரிக்கு நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக உரித்தாக்குவதற்கு அல்லது விடுவிப்பதற்கு இடமளித்தல் வேண்டும்.

(ஈ) மாகாணத்தினுள் அமைந்துள்ள அனைத்து பஸ் நிலையங்களையும் உரிய முறையில் பராமரிக்கும் பொறுப்பு போக்குவரத்து அதிகாரிகளுக்குரியதாகும்.

(உ) பிரயாணிகள் பஸ் சேவைகள் முகாமைத்துவம் அல்லது பஸ்வண்டிகளை நிறுத்தி வைக்கும் வசதிகளை அளிப்பதற்காக போக்குவரத்து அதிகாரிக்கு செலுத்த வேண்டிய சட்டமுறையிலான பணம் தவிர பிரயாணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரமுடைய ஓட்டுநர் ஒருவர் அல்லது ஊழியர் ஒருவர் வேறு தனியார் ஒருவருக்கோ நிறுவனங்களுக்கோ எவ்விதப் பணமும் செலுத்தலாகாது.

(ஊ) பஸ் நிலையங்களில் பஸ் வண்டிகளை ஒழுங்குறச் செய்தல் முகாமைத்துவத்திற்கு அறிவுரை வழங்கல், விபரங்களைப் பெறல், பிரயாணிகளினதும், ஓட்டுநர்களினதும் பிரச்சினைகளுக்கு ஏற்ற தீர்வுகாணல் என்பனவைகளுக்கு அதிகாரியால் நியமிக்கப்பட்டுள்ள நிலைய நிர்வாகிகளும் கள உத்தியோகத்தர்களும் பொறுப்புடையவர்களாவர்.

(எ) பஸ் நிலையத்தில் கடமை புரியும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் சீருடையுடன் அல்லது அரச இலட்சினையுடன் அதிகாரியால் விநியோகிக்கப்படும் அறிமுக அடையாள அட்டையுடன் சேவைபுரிய வேண்டும். அவ்வாறல்லாத எந்தவொரு நபரும் அல்லது ஏற்பாடும் பஸ் சேவை முகாமைத்துவத்திற்கு தொடர்பாவதை தடுப்பதற்கும் சட்டமூல நடவடிக்கை எடுப்பதற்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும், அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கும் அதிகாரமுண்டு.

(ஏ) பஸ் நிலையத்திற்கு அதிகார சபையால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் பஸ்சேவைகள் முகாமைத்துவத்திற்கு ஏற்றவாறாக கொடுக்கப்படும் அனைத்து சட்டரீதியான உத்தரவுகளும், அறிவுரைகளும் பஸ் நிலையத்தின் அனைத்துப் பகுதியினராலும் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். அதன்படி கருமமாற்றுதலும் வேண்டும்.

(ஐ) பஸ் நிலையத்தினுள் பிரயாணிகள் ஓட்டுநர்கள், ஊழியர்கள் அறிந்து கொள்வது அவசியமென அதிகாரசபை நினைக்கும் பட்சத்தில் பிரசுரங்கள், தகவல்கள் கொடுத்தல், பொது நேரசூசியை காட்சிக்கு வைத்தல் மற்றும் காலத்திற்குப் பொருத்தமான விபரங்களை முன்வைக்க அதிகாரி செயற்படுதல்.

(ஒ) அதிகாரசபையின் முன்னனுமதி அல்லது உடன்பாடின்றி பஸ்நிலையத்தில் அல்லது பஸ் வண்டியினுள் வியாபாரம் செய்தல், பிரசாரம் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

(ஓ) பஸ் நிலையத்தில் பிரயாணிகளுக்கு இடைஞ்சல் ஏற்படும் விதத்தில் ஏனையவர்கள் தங்கியிருத்தல், அவசியமின்றி தங்குதல், புகைபிடித்தல், குடிபோதையுடன் இருத்தல், சண்டை சச்சரவுகளை உண்டாக்குதல், நிர்வாகத்திற்கு இடைஞ்சல் செய்தல், நிதி சேகரித்தல், பிச்சையெடுத்தல் என்பன தடுக்கப்பட்டுள்ளது.

(ஔ) புதிய பஸ்நிலையங்களை நிர்மாணிக்கையில் அதிகார சபையின் அனுமதி பெறல் வேண்டும். புதிய கட்டளைப் பிரகாரம் நிர்மாணித்தல், பஸ் நிலையமொன்று பஸ் சேவையை ஆரம்பிக்கும் முடிவாக்கல் நிலையமாகுவதுடன் பிரயாணிகள் ஏறும், இறங்கும், கடக்கும் இடமாகவும் கவனிக்கப்படல் வேண்டும். அது தொகுதி பஸ் வண்டிகள் சேவை முகாமைத்துவ மையமாகும். அதன்படி பஸ்சேவை நிர்வாகத்திற்கு வசதிகள் செய்தல், பிரயாணிகளுக்குத் தேவையான வசதிகள் செய்தல், பஸ் வண்டிகளை நிறுத்திவைப்பதற்கு வசதிகள் செய்தல், பிரயாணிகளுக்கு தேவையான வசதிகள் செய்தல், பஸ்வண்டிகளை நிறுத்தி வைப்பதற்கு வசதிகளும், ஊழியர்களின் வசதிகள் என்பன பற்றிய நோக்குடன் கட்டிடங்கள் அமைக்கப்படல் வேண்டும். பஸ் நிலையமொன்றின் அத்தியாவசியமான அடிப்படை நோக்கங்களுக்கு இடைஞ்சலாகும் அல்லது நிர்வாகத்திற்குப் பிரச்சினையாகும் வெளிக்கட்டிடங்கள் அமைத்தல் அல்லது அலுவல்கள் செய்வது கூடாது.

(ஃ) இக்கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதை தடை செய்தல் மீறுதல் குற்றமாவதுடன் நியதிச்சட்டத்தின் பிரகாரம் அதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(க) பொது நேரசூசியின் முறைமையின் கீழ் வடமத்திய மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரியினால் பஸ் வண்டிகள் முகாமைத்துவம் செய்யப்படும். பஸ் நிலையங்கள் 6 ஆம் இலக்க அட்டவணையில் உட்படுத்தப்பட்டுள்ளன.

பஸ் தரிப்பிடம்.

4. பிரதான நியதிகளில் ஐந்தாவது உப அட்டவணைக்கப்பால் 6 வது அட்டவணையாக மாகாணத்தினுள் பிரயாணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபை மூலம் பஸ் சேவை முகாமைத்துவப்படுத்திய பஸ் தரிப்பிடங்கள் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**6 ஆவது அட்டவணை**

பஸ் தரிப்பிடங்கள்

1. அனுராதபுரம் மாவட்டம்

1.1 பழைய பஸ் தரிப்பிடம்
1.2 தூர சேவை பஸ் தரிப்பிடம்
1.3 புதிய பஸ் தரிப்பிடம்
1.4 கெக்கிராவ பஸ் தரிப்பிடம்
1.5 தம்புத்தேகம பஸ் தரிப்பிடம்
1.6 கல்னேவ பஸ் தரிப்பிடம்
1.7 தலாவ பஸ் தரிப்பிடம்
1.8 கல்கிரியாகம பஸ் தரிப்பிடம்
1.9 ஹொரவப்பொத்தான பஸ் தரிப்பிடம்
1.10 கஹட்டகஸ்திகிலிய பஸ் தரிப்பிடம்
1.11 மிகிந்தலை பஸ் தரிப்பிடம்
1.12 மதவாச்சி பஸ் தரிப்பிடம்
1.13 கெப்பித்திகொல்லாவ பஸ் தரிப்பிடம்
1.14 நொச்சியாகம பஸ் தரிப்பிடம்

2. பொலன்னறுவை மாவட்டம்

2.1 ஹிங்குராக்கொட பஸ் தரிப்பிடம்
2.2 கதுருவெல பஸ் தரிப்பிடம்
2.3 பக்கமூன பஸ் தரிப்பிடம்
2.4 வெலிகந்த பஸ் தரிப்பிடம்
2.5 சிரிபுர பஸ் தரிப்பிடம்
2.6 மின்னேரிய பஸ் தரிப்பிடம்

**உப பஸ் தரிப்பிடங்கள்**

1. அனுராதபுரம் மாவட்டம்

1.1 புபுதுபுர பஸ் தரிப்பிடம்
1.2 பண்டுலகம பஸ் தரிப்பிடம்
1.3 கவரக்குலம பஸ் தரிப்பிடம்
1.4 நாச்சாதுவ பஸ் தரிப்பிடம்
1.5 பராக்கிரமபுர பஸ் தரிப்பிடம்
1.6 தந்திரிமலை பஸ் தரிப்பிடம்
1.7 பேமடுவ பஸ் தரிப்பிடம்
1.8 கலாஓய பஸ் தரிப்பிடம்
1.9 கலென்பிந்துனுவெவ பஸ் தரிப்பிடம்
1.10 ஹபரண பஸ் தரிப்பிடம்
1.11 ரம்பேவ பஸ் தரிப்பிடம்
1.12 எப்பாவல பஸ் தரிப்பிடம்
1.13 எலயாபத்துச் சந்தி பஸ் தரிப்பிடம்

2. பொலன்னறுவை மாவட்டம்

2.1 மெதிரிகிரிய பஸ் தரிப்பிடம்
2.2 அரலகங்வில பஸ் தரிப்பிடம்
2.3 சுங்காவில பஸ் தரிப்பிடம்
2.4 ஓனேகம பஸ் தரிப்பிடம்
2.5 கட்டுவன்வில பஸ்தரிப்பிடம்
2.6 திம்புலாகல பஸ் தரிப்பிடம்
2.7 கிரிதலே பஸ் தரிப்பிடம்
2.8 செவனபிடிய பஸ் தரிப்பிடம்
2.9 வெகரகல சந்தி பஸ்தரிப்பிடம்

10-103

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.